**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.337/2016**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சிவசுப்பிரமணியம் | **Caste** | : | |
| **Father's Name** | : | **V.O.**சிவசுப்பிரமணியம் | **Calling** | : | டாக்டர் |
| **Village** | : | சின்னாளப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | **68/2026** |
| | | | **Dated** | : | **06.02.2026** |

**06.02.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி ஆஜர்.**

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிக்கும் எனக்கும் எந்த வகையில் பழக்கம் என்றால் எனது நிலத்திற்கு செடிகள் சப்ளே செய்வதால் எனக்கு பழக்கம். கோபி என்ற நபரிடம் ரூ.2 கோடி பணம் கொடுத்துவிட்டு அதை வாங்குவதற்காக எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கோபி யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி நபருக்கு ரூ.2 கோடி வாங்கித்தந்தால் 5 இலட்சம் கமிஷன் தருவதாக கூறினேன் என்றால் சரியல்ல. மேற்படி பணத்தை திரும்பப்பெற கமலகண்ணன், சீனிவாசனை அனுப்பிவைத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி கமலகண்ணன் மற்றும் சீனிவாசன் மீது காசோலை மோசடி வழக்கு 2015ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இருவர் மீதும் 9 இலட்சம் மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கோபி மூலம் தான் பாலாஜி என்பவருக்கு 2 கோடி பணப்பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மேற்படி பாலாஜி சாட்சியாக விசாரிப்பதில் ஆட்சியபணை உள்ளதா என்றால் இல்லை. பாலாஜி என்மீது மதுரை நீதிமன்றத்தில் STC.12/2022ல் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பொய்யான வழக்கு. மேற்சொன்னவாறு கமிஷனுக்காக பொறுப்பிற்காக எதிரியிடம் இருந்து இந்த காசோலை வாங்கினேன் என்றால் சரியல்ல. 2012ம் ஆண்டு யார் மீது எத்தனை காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் ஆவணங்களைபார்த்துதான் சொல்லமுடியும் .மேற்சொன்னவாறு கமிஷனுக்காக பொறுப்பிற்காக எதிரியிடம் இருந்து வா்ங்கிய காசோலை நானே பூர்த்திசெய்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் 2012ம் ஆண்டு எதிரிக்கு கொடுத்த பணத்திற்கு முறையான கணக்கு உள்ளதா என்றால் கணக்கு உள்ளது . அந்த Balance Sheet யை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது ஆடிட்டரிடம் கேட்டால் தெரியும். நான் 50 ஆண்டுகளாக வருமான வரி செலுத்திவருவதால் எனக்கு அதன் நடைமுறைகள் எல்லாம் தெரியும் என்றால் தெரியும். வருமான வரி விதிப்படி ரூ.20,000க்கு மேல் ரொக்கமாக பணம் கொடுக்கவேண்டும் என்றால் வங்கி பணபரிவர்த்தனை மூலம் தான் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான் . ஆனால் எனது ஆடிட்டரிடம் எல்லா கணக்கும் உள்ளது. எதிரிக்கு கொடுத்த ரொக்க பணத்திற்கான source of income இருக்கிறதா என்றால் நான் எனது கையிருப்பில் 12,50,000/- வைத்திருந்தேன். எனது cash flow statment-ன் கணக்கின் வரவு செலவு கணக்கில் வங்கி ஸ்டேட்மெண்ட்யை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

கமலகண்ணன், சீனிவாசன் ஆகிய இருவரும் கமிஷன் தொகையை என்னிடம் கேட்காமல் இருப்பதால் நான் மேற்படி வழக்கை நடத்தாமல் இருக்கிறேன் என்றால் இன்றுவரை வழக்கு நிலுவையில் உள்ளது. புகாரில் குறிப்பிட்டது போல் எதிரி என்னிடம் கடன் ஏதும் பெறவில்லை என்றாலும் அவர் பொறுப்பிற்காக கொடுத்த காசோலை நானாக பூர்த்தி செய்து எதிரி மீது இவ்வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.06 10:48:48 +0530

Judicial Magistrate No.II
Dindigul.